தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1971 ஜூலை 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Breeding of horses in Hosur Cattle Farm

* 302 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to start a horse breeding station in the Hosur cattle farm;

(b) if so, the variety of horses to be introduced; and

(c) when it will be started?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடம் எழவில்லை.

THIRU B. VENKATASWAMY : Is it a fact that a private member—Major Kumaramangalam—has applied for 80 acres of land at Hosur cattle farm, so as to start a horse breeding station?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேஜர் குமாரமங்கலம் அவர்கள் தனிப்பட்ட முறையில் அந்த வட்டாரத்தில் ஒரு குதிரை வளர்ச்சிப் பண்ணை அமைப்பது பற்றி விரும்பி விண்ணப்பித்திருந்தார். அதற்கான இடம் ஓரளவு ஒதுக்கப்பட்டு, அந்த இடம் வழங்குவதற்கான சில கட்டளைகள் தீர்மானிக்கப்பட்டு, அந்தக் கட்டளைகளுக்கு (கண்டிஷன்ஸ்) உட்பட்டு, அவர் அதை ஏற்றுக்கொள்ளுகிறாரா என்று அறியும்படி இந்தத் துறையினுடைய இயக்குநர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி முழு விவரங்கள் இன்னும் முடிக்கப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, previously it was a horse breeding farm. Now there are no horses in this cattle farm. Will this Government come forward to introduce more horses under Government sector at Hosur cattle farm?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நாட்டுக்கு மிக இன்றியமையாததாக இருக்கின்ற, மிக அத்தியாவசியமாக இருக்கின்ற, மாடுகள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் ஆகியவைகளை வளர்க்கும் திட்டமே கூட இன்னும் முழு வெற்றி பெறவில்லை. இதை வெற்றி பெறச் செய்வது இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு—அவர்களுடைய உடல் நலத்தைப் பாதுகாப்பதற்கு—மிக இன்றியமை

யாததாக இருக்கிறது. இதற்கான பெரு முயற்சி வெற்றி பெ கட்டத்தில், அடுத்த முயற்சியாக குதிரையைப்பற்றிக் கவனி படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : குதிரை வளர்ப்புக்காகக் கொடுக்கப்படுகின்றதுபோல், அதே இடத்தில்—ஓசூரில் ஆடு, மாடு, வளர்ப்புக்காகவும் வசதி செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த குதிரை வளர்ப்பு ஒரு தனி வகையான—சிறப்பான—திறமையோடு நடைபெற வேண்டியதாகும். ஆடு, மாடு வளர்ச்சி கிராமந்தோறும் பெருக வேண்டியதாகும். எல்லாக் கிராமங்களிலும், பரவலான முறையில், கிராம மக்களிடத்திலிருக்கும் ஆடு மாடு இனத்தை—தரத்தை—உயர்த்துவதற்கான முறையில் இப்பொழுது செயற்கை முறைக் கருத்தரிப்புத் திட்டம் பெருமளவில் நிறைவேறிக் கொண்டு வருகிறது. அது மட்டுமல்லாமல், ஓசூர் பண்ணையிலேயே கூட, இன்றைக்கு மூன்று பொலி குதிரைகளும் ஐந்து பெண் குதிரைகளும் அடையாளத்திற்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

மணல்மேட்டில் கால்நடை மருத்துவ மனை

* 303 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் உயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி, மணல்மேடு பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருத்துவ மனை ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் தற்போது அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிற காரணத்தாலும், விவசாயிகள் நிறைந்த பகுதியில் கால்நடைகள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தாலும், இனியேனும் மணல்மேடு பேரூராட்சிப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவ மனையினைத் துவங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியப் பகுதியிலும் ஒரு கால்நடை மருத்துவ மனை ஏற்படுத்தப்படுவது என்பதுதான் இன்றைக்குள்ள நடைமுறையாகும். மணல்மேட்டிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு சிறந்த கால்நடை மருத்துவ மனை நடைபெற்று வருகிறது. மணல்மேட்டுப் பகுதியிலிருந்து ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கிழை என்கிற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் நடைபெற்று வருகிறது. ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் மருந்தகம் இருக்கும்போது விலங்கினங்களுக்கு 'கால்நடை' என்று பெயர் இருக்கும்போது அது அதிக தூரம் என்று கருதப்படுவதற்கு இடம் இல்லாததால், மணல்மேட்டில் ஏற்படுத்துவதற்கு இப்பொழுது வாய்ப்பு இல்லை.